# அமைதிப்படை வாபஸ்: மாகாணசபை கண்டனம்!

University of Jaffna Sri Lanka RECEIVED Library

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 31 | வைகாசி 25 | துல்ஹஜ்தா 2 | இதழ் 20
யாழ்ப்பாணம் | புதன்கிழமை | 07-06-1989

(திருகோணமலை)
இந்திய அமைதிப்படையை விலக்கிக் கொள்ளுமாறு ஜனாதிபதி ஆர். பிரேமதாசா விடுத்த கோரிக்கையை வாபஸ் பெறவேண்டுமென்று வட-கிழக்கு மாகாணசபை கேட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற மாகாணசபைக் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

தீர்மானத்தை முன்மொழிந்து முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் பேசுகையில், "இலங்கை இரண்டுபடவிருந்தவேளையில் இந்தியா தலையிட்டு அதனைத் தடுத்தது. எனவே ஜனாதிபதி பிரேம

(8-ம் பக்கம் பார்க்க]

## அச்சுவேலி, ஆவரங்கால் புத்தூரில் ஹர்த்தால்

(அச்சுவேலி)
அச்சுவேலி ஆவரங்கால், புத்தூர் பகுதி நேற்று ஸ்தம்பிதமடைந்தது.

வர்த்தக நிலையங்கள் பாடசாலைகள் செயற்படவில்லை. போக்கு வரத்து வாகனங்களின் சேவையும் அந்த வழிகளில் நடைபெறவில்லை. பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

திங்கள் அதிகாலை புத்தூர் தகரம் பிள்ளையார் கோவில்

(8ம் பக்கம் பார்க்க)

## இந்திய அமைதிப்படை வெளியேறும்பட்சத்தில்

# வட-கிழக்கில் அமைதி ஏற்பட

# புதிய இலங்கை ராணுவப்பிரிவு

## உயர்மட்ட மாநாட்டில் 200 கோடி ரூபா ஒதுக்கீடு

(நமது நிருபர் துவான் நவீர்)
இலங்கையிலிருக்கும் இந்திய இராணுவத்தினர் நாட்டைவிட்டு வெளியேறும் பட்சத்தில் வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் அமைதியை நிலைநாட்டும் பணியில் இலங்கையின் புதிய இராணுவப் பிரிவு ஒன்று கடமையில் ஈடுபடும் என்றும், இதற்காக 200 கோடி ரூபா ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது என்றும் 'ஈழநாடு'க்குக் கிடைத்த சிறப்புச் செய்'தி கூறுகிறது.

கடந்த வாரம் நடைபெற்ற பாதுகாப்பு, பந்தோபஸ்து சம்பந்தமான உயர்மட்ட மாநாட்டில் இது தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டு முடிவுசெய்யப்பட்டன.

(8ம் பக்கம் பார்க்க)

## மட்டுவில், நுணாவிலில்

(யாழ்ப்பாணம்)
தென்மராட்சி பகுதியிலுள்ள மட்டுவில், நுணாவில பகுதிகள் கடந்த திங்கட்கிழமை அதிகாலை தொடக்கப் நேற்றுமாலைவரை பலத்த சோதனைக்குள்ளானது.

இதன் எதிரொலியாக இப்பகுதிகளுடாக அனைத்துத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டிருந்தது.

இடையிடையே துப்பாக்கிச் சூட்டுச்சத்தங்களும் கேட்

(8-ம் பக்கம் பார்க்க)

## நெல்லியடியில் நேற்று ஏற்பட்ட பதற்றம்

(வடமராட்சி)
நெல்லியடியில் நேற்றுக் காலை துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் கேட்டதைத் தொடர்ந்து, மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் நிலவியது.

நெல்லியடி கொடிகாமம் வீதியிலுள்ள 'சென்றி' மீது இனந்தெரியாதவர்கள் 'கிர

(8-ம் பக்கம் பார்க்க)

## மீனவர்மீது தாக்குதல் இருவர் பலி! பலர் காயம்

(மட்டக்களப்பு)
மீன்பிடிக்கச் சென்ற முஸ்லிம் மீனவர்கள் மீது ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்று நடத்திய தாக்குதலகளையடுத்து கல்முனை சம்மாந்துறைப் பகுதியில் மீண்டும் பதற்றம் தோன்றியுள்ளது.

இயந்திரப்படகு ஒன்றில் சென்ற ஆறு மீனவர்கள் மீது படகில் வந்த ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்றினால் தாக்குதல்கள் மேற்கொள்ளப்

(8-ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ மீனாட்சி ஷொப்பிங் கொம்பிளெக்ஸ்

யாழ்ப்பாணப் பட்டினத்தில் பஸ் ஸ்ராண்டிற்கு அண்மித்து இல. 430 ஆஸ்பத்திரி வீதியில்



மருந்தகமும் பலசரக்கு மாளிகையும் தன்னகத்தேகொண்டிருக்கும்

ஸ்ரீ மீனாட்சி ஷொப்பிங் கொம்பிளெக்ஸ்

ஆரம்பிக்கப்பெற்று இன்றுமுதல் சேவையாற்றுகிறது

(சி-2916) நிர்வாகி

## அமைதிப்படையை வெளியேற்றகாலக்கெடு இலங்கை கோரிக்கையை இந்தியா நிராகரிக்கும்?

(புதுடில்லி)
இந்திய அமைதிப்படையை ஒரு குறிப்பிட்ட திகதியினுள் வாபஸ் பெறுமாறு இலங்கை ஜனாதிபதி விடுத்த கோரிக்கைக்கு இந்தியா இணங்க முடியாது என்று சொல்லக் கூடுமென அரசியல் அவதானிகள் புதுடில்லியில் நேற்று கருத்து தெரிவித்தனர்.

இந்தியப் பிரதமருடன் இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலர் திரு. பேர்னட் திலகரட்ண சந்தித்தபோது அமைதிப்படை விலகலுக்கான காலஅட்டவணை பற்றியே முக்கியமாக கலந்துரையாடப்பட்டது.

இலங்கை ஜனாதிபதி கேட்டுள்ளதுபோல் யூலை 29-ம் திகதிக்கு முன்பாக அமைதிப்படையை வாபஸ் பெறுவது நடைமுறை சாத்தியமில்லை

(8-ம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக விரிவுரைகள் நேற்று மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
பல்கலைக்கழக ஊழியர்களின் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தினால் பல நாட்கள் நடைபெறாதிருந்த யாழ். பல்கலைக்கழக விரிவுரை வகுப்புகள் நேற்று முதல் மீண்டும் ஆரம்பமானது.

(8-ம் பக்கம் பார்க்க)

## கடைகள் அகற்றப்பட்டன

(யாழ்ப்பாணம்)
யாழ். நவீன சந்தைக்கு உட்புறத்தில் அங்காடி வியாபாரிகளுக்கு ஒதுக்கிக்கொடுக்கப்பட்ட இடத்தில் குறித்த தவணைக்குள் அவர்கள் கடைகளைப் போடாததால் அக்கடைகள் யாவும் அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாக ஈ. பி. ஆர். எல். எவ். நேற்று [illegible] பத்திரிகைக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

## கடந்த சில மாதங்களில் 7000 பேர் பலி!

### தேசாபிமான பொதுமுன்னணி தகவல்

(கொழும்பு)
நாட்டின் சகலபகுதிகளிலும் கடந்த சில மாதங்களில் ஏழாயிரம் பேர்வரையில் கொல்லப்பட்டும், மூவாயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்துமுள்ளதாக 'தேசாபிமான பொது முன்னணி' பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இம்முன்னணி மேலும் தெரிவிக்கையில், "1989ம் ஆண்டு பெப்ரவரி மாதம் பௌத்த சாசன அமைச்சு அமைக்கப்பட்ட பின்னர் 27 பௌத்த பிக்குகள் கொல்லப்பட்டும், எட்டு பௌத்த பிக்குகள்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]

## விற்பனைக்கு

க. பொ. த. (உ. த.) பிரயோக கணிதப் பயிற்சிப் புத்தகம் 'நிலையியல் பகுதி 1'' எங்கும் விற்பனையாகின்றது. 1990, 1991 பரீட்சைகளுக்குரிய பாடத்திட்டத்திற்கமைந்தது. யாழ். முன்னணிக் கல்லூரிகளின் ஆசிரியர்களால் சிபார்சு செய்யப்பட்ட நூல். ஆசிரியர்: சி. துரையப்பா, சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.
(சி 2808)

## தவறிவிட்டது

ஆனைப்பந்திக்கும், பெரிய கடைக்கும் இடையில் பணத்துடன் கூடிய பாக் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தேசிங்குராஜன், இல. 3, வைமன் வீதி, யாழ்ப்பாணம். சன்மானம் வழங்கப்படும்.
[சி-2915]

## தேவை

பழைய செம்பு, பித்தளை, அலுமினியம், வெண்கலம் உயர் விலைக்கு எடுக்கப்படும். பிள்ளையார், 259, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.
(2752)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# துப்பாக்கி முனையில் ரூபா 1½ லட்சம் கொள்ளை

## ஏறுவூரில் சம்பவம்

[மட்டக்களப்பு]

கடந்த சில நாட்களாக மட்டக்களப்பு, ஏறுவூர்ப் பகுதிகளில் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

கடந்த வாரத்தில்மட்டும் பதினைந்துக்கு மேற்பட்ட கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக மட்டக்களப்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த வியாழன் இரவு ஏறுவூர்ப் பிரபல வர்த்தகரான கே. எஸ். மனோகரன் என்பவரின் வீட்டில் புகுந்த ஆயுதம் தாங்கிய கோஷ்டியொன்று வீட்டிலிருந்தவர்களைத் துப்பாக்கிமுனையில் மிரட்டி ஒன்றரை லட்சம் ரூபா ரொக்கப் பணத்தையும் நாற்பது பவுண் நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

இதேஇரவு பாடசாலை அதிபரான எம். தாகூர் என்பவரின் வீட்டில் 28 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

# தெல்லி. ஆஸ்பத்திரியில் மனநோயாளர் அதிகரிப்பு

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பழை அரசினர் வைத்திய சாலையில் உள்ள மனநோயாளர் பிரிவில் மனநோயாளர் தொகை அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

வெளிநாட்டு முகவர்களால் ஏமாற்றப்பட்டவர்களும், போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களும் மனநோயால் பாதிக்கப்பட்டவர்களில் கூடுதலாக காணப்படுகின்றனர்.

பதினெட்டு வயதிற்கு மேற்பட்டவர்களும் இருபத்தெட்டு வயதிற்கு உட்பட்ட இளைஞர், யுவதிகளே தற்பொழுது மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்களாவர் என தெரிவிக்கப்படுகிறது.

# மன்னாரில் கடற்றொழில் பயிற்சிப் பாடசாலை

(மன்னார்)

மன்னாரில் கடற்றொழில் பயிற்சிப்பாடசாலை ஒன்று நிறுவப்பட உள்ளது.

பேசாலையில் அமைக்கப்பட இருக்கும் இக்கடற்றொழில் பயிற்சிப்பாடசாலைக்கான கட்டிட நிர்மாண வேலைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

## தேவை

ஆங்கில தட்டெழுத்தாளர் பெண்களுக்கு வேலைவாய்ப்பு. நேரில் தொடர்பு கொள்ளவும். ''சுப்ப கனன்'' கொப்பி சேவை, 13, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.
(சி-2908)

# 'சமயப்பணி சமுதாயத்திற்கு மிகவும் முக்கியம்'

(பருத்தித்துறை)

''சமய, சமூகப் பணிகள் மனித சமுதாயத்திற்கு மிக முக்கிய பணிகளாகும். இவ்வாலயத்தின் திருப்பணிச்சபையின் தலைவராகப் பணியாற்றிய அமரர் வைத்திய கலாநிதி அருளானந்தம் ஞாபகார்த்தமாக நீர்த்தாங்கி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது மிகப் பொருத்தமான தொண்டாகும்.''

இவ்வாறு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் சுமார் 75 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட நீர்த்தாங்கியைத் திறந்துவைத்து உரையாற்றிய பருத்தித்துறை பிரதேச சபை நிர்வாக அதிகாரி திரு. பெ. கனகசபாபதி குறிப்பிட்டார்.

இவ்வைபவம் ஆலய தர்மகர்த்தா சபை உறுப்பினர் திரு. எஸ். தேவதாசன் தலைமையில் நடைபெற்றது.

ஆலய முகாமைத் தர்மகர்த்தா திரு. எஸ். சந்திரசேகரம், திரு. பி. கனகசபாபதி ஆகியோர் சம்பிரதாயபூர்வமாக நீர்த்தாங்கியை திறந்து வைத்தனர்.

திரு. எஸ். தேவதாசன் தமது தலைமையுரையில், இந்நீர்த்தாங்கியை வைத்தியகலாநிதி அருளானந்தம் தங்கரூபன், தமது தந்தையின் பெயரால் அமைத்துத் தந்தமை வரவேற்கப்படவேண்டியதாகும் என்றும் இவ்வாலய வளர்ச்சிக்கு இன்னும் பல உதவிகளை அவர் வழங்க முன்வருவாரெனவும் குறிப்பிட்டார்.

# ''மாணவர்கள் சமூக ஏற்றத் தாழ்வின்றி வாழப் பழகவேண்டும்''

[அராலி]

''பாடசாலைகளில் கல்விகற்கும்போது ஒற்றுமையாக-சகோதரர்களாக இருக்கும் மாணவர்கள் பாடசாலைகளை விட்டு வெளியேறியதும் எந்த வித ஏற்றத் தாழ்வுகளும் பாராட்டாது ஒன்றுசேர்ந்து வாழப் பழகிக்கொள்ளவேண்டும்,''

அராலி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பண்டத்தரிப்பு கோட்டக்கல்வி அதிகாரியும், அகில இலங்கை சைவநெறித் தொண்டர் கழகப் போஷகருமான திரு. க. மகேசன் மேற்கண்டவாறு கூறினார்.

கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் திரு. எஸ். செல்வராசா தலைமையில் இவ்விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

திரு. மகேசன் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:-

''மாணவர்கள் எக்காலமும் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடக்கூடாது. சமூக விரோதச் செயல்கள் எப்பொழுதும் தீமையையே ஏற்படுத்தும். ஆதலால் மற்றவர்கள் வருந்தும்படி செய்யாதிருந்தால் ஒரு பொல்லாப்பும் ஏற்படாது'' என்று குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டை கொத்தணிப் பாடசாலைகள் அமைப்பு அதிபர் திரு. டாஸ் உரையாற்றினர்.

இப்போட்டியில் முறையே சுந்தரர் (பச்சை), சம்பந்தர் (மஞ்சள்), அப்பர் (சிவப்பு) இல்லங்கள் 1ம், 2ம், 3ம் இடங்களைப் பெற்றன. வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

## வருடாந்த உற்சவம்

[யாழ்ப்பாணம்]

உடுவில் சிவஞானப் பிள்ளையார் வருடாந்த உற்சவம் இம்மாதம் 10ந் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

18ந் திகதி தேர்த் திருவிழாவும், 19ந் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன.

0 0 0

[அச்சுவேலி]

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. 17ந் திகதி தேர் உற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.


## விற்பனைக்கு

பதனிடப்பட்ட பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு.

COUNTRY OF ORIGIN HOLLAND

**பிள்ளையார்**

259, காங்கேசன்துறைவிதி, யாழ்ப்பாணம்
(சி–2785)

உ

ஓம் விராட்விஸ்வப்ரம்மணே நம

## திறப்பு விழா அழைப்பு

## ரகு போட்டோ டெக்னிக்

**(RAGU PHOTO TECHNIC & CAMERA REPAIRS WORKS SHOP)**

காலம்: வைகாசித்திங்கள் 25ஆம் நாள் (07-06-89) (இன்று) புதன்கிழமை காலை 9-30 மணிமுதல் 10-18 மணி வரை வரும் சுபவேளை.

இடம்: 301, (மேல் மாடி) கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (கன்னாதிட்டிச் சந்திக்கு அருகாமையில்.)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

நா. சு. நாராயணசாமி தம்பதியர்.

187/6, கில்னர் லேன்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி 2810)

உ

## உபநயன அழைப்பிதழ்

**அன்புடையீர்!**

நிகழும் சுக்கில ஹு வைகாசி மீ 26-ந் திகதி (08-06-1989) வியாழக்கிழமை காலை 8-30—10-30 மணிவரையிலான சுப முகூர்த்த வேளையில் எமது புதல்வர்கள்,

திருநிறை செல்வன்கள்:

**பி. ரகுராமன் & பி. ரவிசங்கர்**

ஆகியோருக்கு

பிரம்மோபதேசம், உபநயனம் செய்ய இறை அருள் கூடியிருப்பதால் உறவினர், நண்பர்கள் யாவரும் அத்தருணம் சமூகந்தந்து உபநீதர்களை வாழ்த்தும்வண்ணம் கேட்கின்றோம்.

அன்புடன் அழைக்கும்:

**சோ. இ. பிரணதார்த்திஹரக்குருக்கள்,**
**பி. சுகந்திகுந்தளாம்பிகை.**

வீரபத்திரசுவாமிகோவில்,
கோப்பாய் தெற்கு. (சி 2909)

சுன்னாகம்
பல நோக்கு
கூட்டுறவுச் சங்கம்
(வரைவுள்ளது)
சுன்னாகம்

## அறிவித்தல்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 3000ற்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன.

வெற்றுச் சாக்குகளுக்கு மீளளிப்பு வைப்புப்பணமாக ரூபா 250/- சங்கத்தில் செலுத்திச் சங்க வேலைநாட்களில் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

14-06-1989 புதன்கிழமை நண்பகல் 12-00 மணிவரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**பொதுமுகாமையாளர்**
சுன்னாகம்
பல நோக்கு சங்கம்,
சுன்னாகம்.
07-06-1989.


## முதலாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி

**திரு. M. சண்முகரட்ணம் (தபா)**
(சுபாமாலா மோட்டோர்ஸ் பங்காளர்)
யாழ்ப்பாணம்



மலர்வு:
3 - 6 - 1956

உதிர்வு:
19 - 5 - 1988

திதி:
7 - 6 - 1989

எண்ணியே ஓராண்டு இமைப்பினில் கழிந்ததையா
கண்ணினுள் மணியே ஒத்து நீ இருந்தகாலம்
பண்ணிய உலகில் நாமோ பல்கிடதவங்கள் செய்வோம்
விண்ணிலே சென்று விட்டாய் விளம்பிட முடியாதுள்ளோம்
இருமகார் களிப்புக்கண்டு இனிது நீ வாழ்ந்தாய் ஐயா
தருமுறை மனைவியோடு தமர்களும் பிறரும் நாளும்
பருவரல் என்றும் காரைவகையினச் செய்து வந்தாய்
ஒருமுறை வந்து நீயும் உரைத்திட எப்போ காணபோம்

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

**மனைவி, பிள்ளைகள்.**
**பெற்றோர், சகோதர சகோதரிகள்,**
**உற்றார், உறவினர். நண்பர்கள்.**

79, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி 2912)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் இராணுவ நடவடிக்கைக்கு அமெரிக்க அதிபர் கண்டனம்!

## 3000 பேர் பலி

(பீக்கிங்)

சீன மாணவர் ஜனநாயக ஆர்ப்பாட்டத்தை நசுக்க சீன இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கையின்போது 3000 பேர் உயிரிழந்தனர் என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

## சகல ஏற்றுமதிகளையும் நிறுத்துமாறு ஜனாதிபதி புஷ் உத்தரவு

(வாஷிங்டன்)

**சீனாவில் ஜனநாயகப் போராட்டம் நடத்திவரும் மாணவர்களுக்கு எதிராக சீன அரசாங்கம் வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டதைக் கண்டிக்கும் வகையில் சீனாவுக்கான சகல இராணுவ, வர்த்தக ஏற்றுமதிகளையும் உடனடியாக நிறுத்தும்படி அமெரிக்க அதிபர் திரு. ஜோர்ஜ் புஷ் அவசர உத்தரவொன்றை விடுத்துள்ளார். சீனமாணவர்களின் அமைதியான மக்களின் ஆதரவுபெற்ற ஜனநாயகப் போராட்டத்திற்கு எதிராக சீன அரசாங்கம் அராஜகத்தைக் கட்டவிழ்த்து விட்டது என்று திரு. புஷ் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

அமெரிக்க அதிபர் திரு. புஷ்ஷின் இந்த உத்தரவு அமெரிக்காவின் சகல அரசாங்க, தனியார்துறைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சீனாவில் சகல வன்முறைகளும் நிறுத்தப்பட வேண்டும் என்று திரு. புஷ் தெரிவித்துள்ளார்.

### பலவெளிநாடுகள் கண்டனம்

இதேவேளையில் சீன அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கையை இந்தியா, பிரிட்டன், பிரான்ஸ், ஆஸ்திரேலியா, பங்களாதேஷ், சுவீடன், யூகோஸ்லாவியா ஆகிய நாடுகளும் கண்டித்துள்ளன.

### பிரிட்டன் அமைச்சர்கள் விஜயம் ரத்து

சீனாவின் இராணுவநடவடிக்கையைக் கண்டிக்கும்வகையில் விரைவில் சீனாவுக்கு மேற்கொள்ளஇருக்கும் பிரிட்டிஷ் அமைச்சரின் விஜயத்தையும் பிரிட்டனுக்குச் செல்ல இருக்கும் சீன அமைச்சரின் விஜயத்தையும் பிரிட்டன் ரத்துச்செய்துள்ளதாக பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் திரு. ஜெவ்ரி ஹோவ் தெரிவித்துள்ளார்.

### ஆஸி. பிரதமர்

சீனாவுக்கு மேற்கொள்ள இருந்த ஆஸ்திரேலிய பிரதமரின் உத்தேச விஜயமும் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக ஆஸ்திரேலியா அறிவித்துள்ளது.

## ஹிந்தி மொழியில் திருக்குறள்

(சென்னை)

''தமிழ் மொழியிலும் மற்றும் தென்னிந்திய மொழிகளிலும் பொதிந்துகிடக்கும் இலக்கியச் செல்வங்களை ஏனைய மாநிலமக்களும் அறிந்து ஆராயும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். இதற்காக இந்திய திறந்த பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்புக்களை ஆரம்பிக்கவேண்டும்.''

இவ்வாறு இந்திய உபஜனாதிபதி திரு. சங் ர் தயாள் சர்மா தெரிவித்துள்ளார்.

திருக்குறளின் ஹிந்திமொழிபெயர்ப்பு நூலை வெளியிட்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

1330 திருக்குறள்களையும் திரு. எம். ஜி. வெங்கடகிருஷ்ணன் ஹிந்திமொழியில்மொழிபெயர்த்தார்.

இன, மத, பேதமின்றி உலகம் முழுவதற்கும் பொருந்தும் விதத்தில் அறிவிற் சிறந்த கருத்துக்களை உள்ளடக்கியது திருக்குறள் என்றும் திரு. சங்கர்தயாள் கூறினார்.

## 6 ஆயிரம் துருப்புக்கள் விரைவு

(மாஸ்கோ)

சோவியத் யூனியனின் மத்திய ஆசியாவிலுள்ள உஸ்பெக்கிஸ்தான் குடியரசில் தொடரும்இனக்கலவரங்களை அடக்குவதற்காக மேலும் ஆறுயிரம் துருப்புக்களை சோவியத் மத்திய அரசு அனுப்பியுள்ளதாக

(6-ம் பக்கம் பார்க்க)

## "அமெரிக்கர்கள் பயங்கரவாதிகள்"

### மரண சாசனத்தில் கொமெய்னி

(தெஹ்ரான்)

''அமெரிக்கத் தலைவர்கள் பயங்கரவாதிகள்''

இவ்வாறு மறைந்த ஈரானிய ஆன்மீகத் தலைவர் அயத்தொல்லா கொமெய்னி தமதுமரண சாசனத்தில் தெரிவித்துள்ளதாக தெஹறான் செய்திகள் தெரிவிக்கின்றன.

வல்லரசுகளையும், தீவிர கொள்கைகளைக் கடைப்பிடிக்காத அரபு நாடுகளின் தலைவர்களையும் அயத்தொல்லா கொமெய்னி தமது சாசனத்தில் கண்டித்துள்ளார்.

எகிப்து, சவூதி அரேபியா, ஜோர்டான், ஈராக் ஆகிய நாடுகளின் தலைவர்களையே அவர் கண்டித்துள்ளார்.

புதிய ஆத்மீகத் தலைவரும் தமது காலத்தைப் போலவே தீவிர கொள்கைகளைக் கடைப்பிடிக்கவேண்டும் என்றும் அந்த சாசனத்தில் கேட்கப்பட்டுள்ளது.

## "ஐ.நா.பாதுகாப்பு சபையை உடன் கூட்டவும்"

### நியூயோர்க்கில் ஆர்ப்பாட்டம் செய்யும் சீன மாணவர் கோரிக்கை

[நியூயோர்க்]

மாணவர்களின் மீதும், மக்கள் மீதும் சீன இராணுவம் நடத்திய தாக்குதல், சீனாவின் இன்றைய நெருக்கடி குறித்து ஆராய உடனடியாகப் பாதுகாப்புச் சபையைக் கூட்ட வேண்டும்.

இவ்வாறு அமெரிக்காவில் இருக்கும் சீன மாணவர்கள், ஐ. நா. செயலாளர் நாயகத்தைக் கேட்டுள்ளனர்.

நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள்சபை அலுவலகத்திற்கு முன்பு சீனாவில் ஜனநாயகப் போராட்டம் நடத்திவரும் மாணவர்களுக்கு ஆதரவாகப் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்திய அமெரிக்க சீன மாணவர்களே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

## மேற்கு நாட்டவர்களை நாடு திரும்ப ஆலோசனை

### ஜனநாயகப் போராட்டம் விஸ்தரிப்பு

(பீக்கிங்)

பீக்கிங்கின் 'தியனன்மென்' சதுக்கத்தை சீன இராணுவம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் பீக்கிங் நகருக்குள் இராணுவம் தொடர்ந்து குவிக்கப்பட்டு வருவதாகவும் மாணவர் புரட்சிக்கு எதிரான அரசின் நடவடிக்கைகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை என்றும் சீன வானொலியும் தொலைக்காட்சியும் தெரிவித்துள்ளன.

இதேவேளையில் கடந்த இரவு முழுவதும் பீக்கிங் நகரில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் தொடர்ந்து கேட்டவண்ணம் இருந்ததாகவும் பீக்கிங் நகர் எங்கும் பதட்டநிலை நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

'சீன மாணவர்கள் பல்கலைக்கழகங்களிலும் மற்றும் பல இடங்களிலும்வீதித்தடைகளை அமைத்துவரும் அதேவேளையில்போராட்டம் பல்வேறு நகரங்களுக்கும் பரவியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது

இது இவ்வாறிருக்க. சீனாவில் உள்ள மேற்கத்தியநாட்டு மக்களை தத்தம் நாடுகளுக்குத் திரும்புமாறு அந்த நாடுகள் ஆலோசனை தெரிவித்துள்ளன.

இதேசமயம் இன்றும் நாளையும் வேலைக்குச் செல்லவேண்டாம் என பீக்கிங்கில் உள்ள வெளிநாட்டு வர்த்தக நிலையங்களில் பணியாற்றுவோருக்கு சீன அரசு பணிப்புரை வழங்கியுள்ளது என்றும் இந்தப்பணிப்புரைக்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லைஎன்றும் கூறப்படுகிறது.

## "ஈரானின் புதிய ஜனாதிபதி மாபெரும் தலைவர்"

### ஜனாதிபதி 'புஷ்' கூறுகிறார்

(வாஷிங்டன்)

''ஈரானின் புதிய ஜனாதிபதி ஆத்மீகத் தலைவர் அலி கொய்மெனி மாபெரும் தலைவர்'' இவ்வாறுஅமெரிக்கஜனாதிபதி திரு. ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

அலிகொய்மெனியின்பதவிக்காலத்தில் ஈரான் அமெரிக்க உறவுகள் அபிவிருத்தி அடையும் என தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

லெபனானில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அமெரிக்க பயணக்கைதிகளை விடுதலை செய்ய புதிய ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் திரு. புஷ் கேட்டுக்கொண்டார்.

## ஐ. நா. செயலாளர் நாயகம் கவலை

(நியூயோர்க்)

சீன மாணவர்கள் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கை குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் திரு. பெரஸ்டி குயிலர் கவலை தெரிவித்துள்ளார்.

## குழப்பங்களின் மத்தியிலும் பொருளாதார வளர்ச்சி

### மத்தியவங்கி அறிக்கையில் தகவல்

(கொழும்பு)

உற்பத்தி, பங்கீ[illegible] வடிக்கைகளில் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தி[illegible] பரந்த உள்நாட்டுக் குழப்பங்கள் நாட்டில் காணப்பட்ட [illegible] பொருளாதார வளர்ச்சி [illegible] கடந்த ஆண்டில் அதிகரித்துள்ளது.

அண்மையில் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட கடந்த ஆண்டுக்கான ஆண்டறிக்கையில இவ்விபரம் வெளியாகியுள்ளது.

கடந்த வருடம் இந்த பொருளாதார வளர்ச்சி, வீதத்தினால் அதிகரித்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டின் முன்

(6-ம் பக்கம் பார்க்க)

## நீண்ட 'கியூ'வில் மோட்டார் சைக்கிள்கள்!

(யாழ்ப்பாணம்)

மோட்டார்சைக்கிள்களுக்கு 'பாஸ்' எடுக்கவேண்டுமென்ற அறிவிப்பைத் தொடர்ந்து யாழ். கச்சேரியிலும், மணிக்கூட்டு வீதியிலுள்ள அசோகா ஹோட்டலிலும் நூற்றுக்கணக்கான மோட்டார் சைக்கிள்கள் வரிசையில் நிற்கக் காணப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பாவம் என்னும் கொடியவனுக்குப் பல ஆயுதங்கள் இருந்தாலும் அந்த ஆயுதங்களுக்கெல்லாம் ஒரு பிடி உண்டு. அதன் பெயர்தான் பொய்.

—ஹோம்ஸ்

## நமது நோக்கு

## ஹாட்லி பெற்ற முத்திரை!

ஹாட்லிக் கல்லூரி மீண்டும் தனது சொந்தக் கட்டிடத்திற்கு இடம் மாறியுள்ளது. 150 வருட வெற்றிகர வாழ்வை நடத்தி, தபாற்தலை பெற்று, பெருமையோடு பீடுநடை போடுகிறது!

1838 பங்குனி மாதம் பருத்தித்துறையில் ஆங்கிலப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டதுதான் இந்தக் கல்லூரி. 1826ல் மிஷனரியாக வந்தவர்தான் பீட்டர் பேர்சிவல். கல்வியில் அவர் போட்ட விதை இன்று விருட்சமாகிப் பலருக்கு நிழல் கொடுத்திருக்கிறது; வாழ்வு கொடுத்திருக்கிறது.

பாடசாலையைத் தொடக்கப் பேர்சிவலுக்குக் கொடுக்கப்பட்ட தொகை அறுபத்தைந்து ரூபா மட்டுமே! தமது சொந்தப் பணத்தையே முதலிட்டுத் தொடக்கியிருக்கிறார் பாடசாலையை.

வடபகுதி மக்கள் கல்விக்கு நிதி வழங்குவதில் என்றுமே பின் தங்கியதில்லை. இவர்களுக்கு வழிகாட்டிவைத்திருக்கிறார் போலும் இந்தப் பாதிரியார். அவரது விடாமுயற்சி போற்றப்பட வேண்டும்; அவர் நினைவுகூரப்பட வேண்டும்!

1926ல் இரசாயன அறை, வகுப்பறைகள் ஆகியவற்றுக்கான அடிக்கல் நாட்டுவிழா. உணர்ச்சியால் என்றுமே பிளவுபடாது கிழக்கிலிருந்து அடிக்கல் நாட்ட வந்தவர் வண. ஹாட்லிக். கிழக்கிலங்கை மிஷனரியைச் சேர்ந்த ஹாட்லியின் பெயரைக் கல்லூரிப் பெயராகப் பெற்றுக்கொண்டது வடமராட்சி. இன்று கல்வியை வளர்க்கும் மந்திரமாக ஒலிக்கிறது ஹாட்லி!

இப்பாடசாலையின் வளர்ச்சியில் திரு. டி. பி. நைல்ஸ் முதல் இன்றைய அதிபர் திரு. எஸ். பி. பாலசிங்கம் வரை பல அதிபர்கள் அயராது உழைத்திருக்கிறார்கள்; கல்விமான்கள் பலரை உருவாக்கியிருக்கிறார்கள். பொற்காலமாகத் திகழ்ந்த "பூரணம்பிள்ளை காலத்தை" இங்கு நாம் விசேடமாகக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

பூரணத்தார் தலைமையில் கல்லூரி பூரணமாகச்செயற்பட்டது எப்படி? வெறும் ஏட்டுக் கல்வி மனிதனைப் பூரண மனிதனாக்காது என்பதை உணர்ந்தவர் அவர். எனவே, இணைப்பாடற் செயற்பாடுகளை ஆரம்பித்திருக்கிறார். ஒவ்வொரு மாணவனும் ஏதோவொரு துறையிலாவது ஈடுபட வேண்டுமெனத் தூண்டியிருக்கிறார்.

ஹாட்லியின் பழைய மாணக்கர்கள் எங்குதான் இல்லை? பல்கலைக்கழகப் பீடாதிபதிகள், நீதிபதிகள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் —இப்படி எந்தத் துறையை நோக்கினாலும்; எந்தத் திக்கை நோக்கினாலும் ஹாட்லியின் முத்திரை பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

பல துறைகளிலும் தனது முத்திரையைப் பொறித்த ஹாட்லிக்கு இன்று அரசினர் முத்திரை வெளியிட்டு மதிப்பளித்திருக்கிறார்கள்.

பத்திலே வியாழன் வந்த காரணமோ என்னவோ, இந்தக் கல்லூரி, பதியை விட்டுக் கிளம்பியது; நூலகத்தை இழந்தது!

வடமராட்சியை வேறு வழியில் விடுவிக்கவந்த அரசாங்கமே இன்று முத்திரை விடுவித்து அரவணைக்க வந்திருக்கின்றது.

எம்மக்களின் எதிர்காலமே நாட்டுக்குத் தேவையான நல்ல கல்வியிலே தங்கியுள்ளது. 150 ஆண்டுகளைக் கண்டுவிட்ட இந்தக்கல்லூரி தொடர்ந்தும் நல்லசேவை செய்து கைகொடுக்கும் என நம்புவோமாக!

ஆய்வுகூடவசதிகள், நூல்நிலைய வசதிகள், விளையாட்டு உபகரணங்கள் ஆகியவற்றின் குறைகளைக் கண்டறிந்து கல்வித்திணைக்களம் வசதிகளை வழங்க வேண்டும், பழைய மாணாக்கரும் பெற்றோரும் தமது பங்களிப்பையும் செய்ய வேண்டும்.

## தெல். யூனியன் கல்லூரிக்கு மூன்று மாடிக் கட்டடங்கள்!

### ஆசிய அபி.வங்கி ரூ. 36 லட்சம் உதவி

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவியுடன் மூன்று மாடிக்கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகள், வன்முறைச்சம்பவங்கள் காரணமாக மிகவும் மோசமாகப்பாதிக்கப்பட்டிருந்த இக் கல்லூரியில் புதிய கட்டிடங்களை அமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் இருந்து 36 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது.

இந்த நிதியுதவியைக் கொண்டு முறையே 175 அடி, 107 அடி, 168 அடி நீளமான மாடிக்கட்டிடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த மூன்று மாடிக்கட்டிடங்களும் மாணவர்களின் கல்விப்போதனைக்குரிய நவீன வசதிகளைக்கொண்டிருக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

இவற்றை விட விஞ்ஞான ஆய்வுகூடம் ஒன்றை நிறுவவும் 14 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அதன் வேலைகள் விரைவில் ஆரம்பமாகுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

### பொதுக் கூட்டம்

[பருத்தித்துறை]

பருத்தித்துறை வட - இந்து மகளிர் கல்லூரி பாடசாலை அபிவிருத்தி சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 18 ஆம் திகதி கல்லூரி மண்டபத்தில் அதிபர் திருமதி எஸ். சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

## கனிவளங்களைக் கண்டுபிடிக்க நவீன ராடர் கருவிகள்

(நமது நிருபர் துவான் நஸீர்)

இலங்கையின் கனிப்பொருள் வளங்களைக் கண்டுபிடிப்பதற்கும், ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் நவீன இயந்திரங்கள் உபகரணங்களை இறக்குமதி செய்யவும் கைத்தொழில் அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போது பூகர்ப்பவியல் ஆய்வுத்திணைக்களத்திடம் உள்ள இயந்திரங்கள் உபகரணங்கள் பழமை வாய்ந்தவை என்றும், நவீன ஆய்வுகளை மேற்கொள்ள இவை போதுமானதல்ல என்பதனால் தான் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் திரு. ஆரியரத்தன ஜயதிலக்க தெரிவித்தார்.

வர்த்தக ரீதியில் பயன்படக்கூடிய வகையிலான ஆய்வுகள் இதுவரை இத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படவில்லை. இத்துறைக்கு அவசியமான நிபுணர்கள், விஞ்ஞானிகள் பெருமளவு குறைவாகவே திணைக்களத்தில் உள்ளனர்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள நிபுணர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விஞ்ஞானிகள் குழுவொன்றை விரைவில் திரட்டுவதற்கும் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. அதே நேரம் இத் திணைக்களத்தின் நடவடிக்கைகள் நிர்வாகம் என்பன புனரமைக்கப்படவுள்ளன. ஊழியர் பற்றுக் குறைக்கு தீர்வுகாணப்படவுள்ளது. இந் நடவடிக்கையின் முதல் கட்டமாக பூமிக்கடியிலுள்ள கனிவகைகளை கண்டுபிடிக்கவும் அளவிடவும் உதவும் நவீன ராடர் கருவி உட்பட பல உபகரணங்களை அமைச்சு கொள்வனவு செய்யவுள்ளது. இதற்காக 50 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

## விவசாயிகள் காப்புறுதி

### யாழ். மாவட்டம் முன்னணியில்!

### பணிப்பாளர் அதிகாரிகளுக்கு கௌரவம்

(யாழ்ப்பாணம்)

நாட்டிலுள்ள சகல விவசாயிகளுக்குமாக அரசினால் ஆரம்பிக்கப்பட்ட 'விவசாயிகள்' ஓய்வூதியத் திட்டத்தில் யாழ். மாவட்டத்திலே அதிகமானோர் சேர்ந்துள்ளனர்.

ஒவ்வோர் மாவட்டத்திலும் 500 விவசாயிகள் இத்திட்டத்தில்இணைவார்கள் என்று அரசு எதிர்பார்த்தபோதிலும், யாழ் மாவட்டத்தில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்டோர் சேர்ந்துள்ளனராம். இதில் அச்சுவேலிப்பகுதியிலேயே அதிகமானோர் சேர்ந்துள்ளனர் என்று தெரிகிறது.

அதிகமான விவசாயிகளை ஓய்வூதியத் திட்டத்தில் சேர்த்துக்கொண்டதற்காக யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திரு. எஸ். சிவகுருவுக்கு விவசாய அமைச்சு மூவாயிரம் ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளதுடன் சான்றிதழும் வழங்கியுள்ளது. உதவிப் பணிப்பாளருக்கு 2500 ரூபாவும், சான்றிதழும் வழங்கப்பட்டது. கூடுதலான கமக்காரர்களை இணைத்தவர் என்ற வகையில் அச்சுவேலி பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. என். மதனசேகருக்கும் பணப்பரிசும், சான்றிதழும் வழங்கப்பட்டன,

இப்பரிசுகள் கொழும்பு விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் வைத்து அளிக்கப்பட்டன.

## விவசாயக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வெங்காயச் செய்கை பற்றிய விவசாயக் கருத்தரங்கு ஒன்று பாண்டியன் குளம் கிராம அபிவிருத்திச்சங்கத்தில் இம் மாதம் 14-ம் திகதி நடைபெறவுள்ளது.

கமநலச்சேவை நிலையத் தலைவர் திரு. எஸ். கந்தையா தலைமையில் நடைபெறும்,இக் கருத்தரங்கில் முல்லைத்தீவு மாவட்ட விவாசயப் பணிப்பாளர் திரு. இ. இரகுபதி. மாந்தை தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சந்திரன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்கிறார்கள்.

## முகாம் மூடப்பட்டது

(மாவிட்டபுரம்)

அளவெட்டி வடக்கிலிருந்த இந்திய அமைதிப்படைமுகாம் கடந்த வெள்ளிக்கிழமையுடன் விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளது.

## பலதும் பத்தும்

### வட்டைகளுக்கு நடந்ததென்ன?

தொட்டாற் சுருங்கி வட்டை-மலையடி வட்டை-வரம்பு வளைந்த வட்டை-சுரங்கா வட்டை! இந்த வட்டைகள்தான் - என்ன?

அம்பாறை மாவட்டத்தில் உள்ளது மல்வத்தைத் தமிழ் பிரதேசம், அங்குள்ள கிராமங்கள் சிலவற்றின் பெயர்கள் தான் இவை!

இந்த வட்டைகளைச் சேர்ந்த 1400 ஏக்கர் நிலம் பாழடைந்துவிட்டது. காரணம் என்ன? 1983 ஆம் ஆண்டுக் கலவரத்தின் பின் தமிழ் விவசாயிகள் அங்கு செல்லவில்லை; செல்லக்கூடிய சூழ்நிலை இல்லை... வேண்டுமென்றே போடும் தடைகள்–பயமுறுத்தல்கள்- அந்தக் காணிகளுக்குச் செல்ல உரிமையேயில்லையா?

1964/65 ஆம் ஆண்டிலேயே அரசாங்கத்திடமிருந்து காணிக்குரிய 'பெர்மிட்' பெற்றவர்கள்! பாவம்! விவசாய வருமானமின்றித் தவித்துக்கொண்டிருக்கிறார்கள்!

— வாணி

## நவாலி திருச்சபையின் ஓய்வுநாள்பாடசாலை தாய்மார் தினவிழா

(சுண்டுக்குளி)

நவாலி திருச்சபையின் ஓய்வுநாட் பாடசாலையில் தாய்மார் தினவிழா கொண்டாடப்பட்டது.

திருச்சபை மண்டபத்தில் ஓய்வு நாட் பாடசாலை அதிபர் திரு. டபிள்யூ. என். தேவகடாட்சம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

இப் பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியை செல்வி ஜெபமணி இயேசுசகாயம் இந்த நாளுக்குரிய செய்தியை வாசித்து உரையாற்றினார். இந்நாட்களில், ஜெபிக்கும் தாய்மார் அதிகம் தேவை என்றும் தங்

(7ம் பக்கம் பார்க்க)

## வடபகுதி வெங்காயத்துக்கு கொழும்பில் அதிக கிராக்கி!

(மாவிட்டபுரம்)

வடபகுதி வெங்காயத்துக்கு கிராக்கியும், விலையேற்றமும் ஏற்பட்டுள்ளதால் பெருமளவு வெங்காயம் லொறிகள் மூலம் கொழும்புக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

இப்பகுதி விவசாயிகள் வெங்காயத்தை தை, மாசி மாதங்களில் அறுவடைசெய்த சமயம் வெங்காயத்தின் விலை வீழ்ச்சியடைந்திருந்தது.

தற்போது வெங்காயத்திற்கு கிராக்கியும், விலையேற்றமும் ஏற்பட்டுள்ளதால் ஏராளமான வெங்காயம் லொறிகள் மூலம் கொழும்புக்கு எடுத்துச்செல்லப்படுகின்றன.

தற்போது வெங்காயத்தை பயிரிடும் காலமாதலால்விதை வெங்காயத்திற்கும் தட்டுப் ஏற்பட்டுள்ளது.

## சந்த திக்குறு சாந்தி கொடுப்பாள்

சந்த திக்குறு சாந்தி கொடுப்பாள்
சர்வ வல்லமை படைத்த திறத்தாள்
விந்தை யானவை புரியும் நலத்தாள்
வீர அற்புத சிற்பர தரத்தாள்
எந்த நற்பணி எத்தொழில் யாவும்
ஏற்று நடத்திட மார்க்கம் உரைப்பாள்
முந்து நல்லியற் துறைகளிற் தேர்ந்து
முடிக்கும் நாக பூஷணி அம்மாள்.

நாக. சண்முகநாதபிள்ளை

[illegible] இன்று 3-ம் திருவிழா!

## இன்று சங்காபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

வட்டுக்கோட்டை கிழக்கு. பிரமணச்சி தோட்டம் கற்பகப்பிள்ளையார் கோவில் வருடாந்த சங்காபிஷேகம் இன்று நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வடக்கு, கிழக்கிற்கு பெருமை தரும் நிகழ்வு"

(வடமராட்சி)

''முத்திரை வெளியீடு ஒரு சாதாரண நிகழ்ச்சியல்ல; சரித்திரப்பிரசித்தி பெற்றவர்களுக்கும், புராதனப் பழமை வாய்ந்த கட்டடங்களுக்கும் முத்திரை வெளியிடுவது மரபாகும்.''

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் 150 வது வருட ஞாபகார்த்தமாக நேற்று முன்தினம் பிரஸ்தாப பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்ற முத்திரை வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பேசுகையில் வடமராட்சி கோட்டக்கல்வி அதிகாரி திரு. பி. வீரபத்திரன் மேற்கண்டவாறு கூறினுர்.

திரு. வீரபத்திரன் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது;

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் 150 வது வருட விழாவை ஒட்டி தபால் திணைக்களம் முத்திரை ஒன்றை வெளியிடுவது. வடக்கு கிழக்கு மாகாணமே பெருமைப்பட வேண்டிய விடயமாகும்.

கல்லூரி உப அதிபர் திரு. எஸ். பொன்னம்பலம் தலைமையில் நடந்த இவ்விழாவில் ஆ. உருத்திரா, வ. காராளசிங்கம், செ. கதிர்காமநாதர், எஸ். சுகந்தன், வடமராட்சி கோட்டக்கல்வி அதிகாரி திரு எஸ். தங்கராசா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வகுப்புப் பிரவேசம்

(வடமராட்சி)

பால்காய்ச்சும் வைபவத்துடன் ஹாட்லிக் கல்லூரியின் மாணவர்கள்தமது வகுப்புகளில் பிரவேசித்தனர்.

நேற்று தபால்தலை வெளியீட்டின்பின் ஹாட்லிக்கல்லூரி உபஅதிபர் எஸ். பொன்னம்பலம் தலைமையில் மேற்படி கல்லூரிப் பிரவேச விழா வெகுசிறப்பாக சமயாசாரப்படி பால்காய்ச்சும் வைபவத்துடன் நடைபெற்றது.

மேற்படி நிகழ்ச்சியில் கல்வி வட்டாரப் பிரமுகர்கள் சமயத்தலைவர்கள் மாணவர் பலரும் கலந்துகொண்டனர்.

நேற்றுமுதல் ஹாட்லிக் கல்லூரியின் சகல வகுப்புக்களும் மேற்படி கல்லூரியிலேயே நடைபெறுமென்பது குறிப்பிடத்தக்கது.

## கொழும்பிலும் பருத்தித்துறையிலும் ஹாட்லிக்கல்லூரி முத்திரைவெளியீடு

(வடமராட்சி)

''பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் 150-வது ஆண்டு ஞாபகார்த்தமாக 75 சதம் பெறுமதியானமுத்திரைவெளியீடு கொழும்பிலும், பருத்தித்துறையிலும் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கொழும்பு பிரதம தபாற்கந்தோரில் பிரதம தபால் அதிபர் திரு. ஈ. ராஜவசம் தலைமையில் இந்த முத்திரை வெளியீட்டு விழா இடம்பெற்றது.

முதலாவது முத்திரையை கல்லூரிஅதிபர்திரு.பொ.பாலசிங்கத்திடம் பிரதம தபாலதிபர் வழங்கி முத்திரை விற்பனையை ஆரம்பித்து வைத்தார்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நடைபெற்ற விழாவிற்கு கல்லூரி உப அதிபர் திரு, எஸ். பொன்னம்பலம் தலைமை வகித்தார்.

முதலாவது முத்திரையை பருத்தித்துறை பிரதம தபால் அதிபர் திரு. ஏ. கணபதிப்பிள்ளை பாடசாலை அபிவிருத்திச் சங்கச்செயலாளர் திரு. எஸ். ராஜேந்திரனிடம் கையளித்தார்,

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கைதடி, நாவற்குழி மகாவிஷ்ணு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திரு. வே. இராமர் தலைமையில் நடைபெறவிருக்கும் இப்போட்டியில் யாழ். கோட்டக் கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன், கொத்தணி அதிபர் திரு. சோ. கணேசலிங்கம். ஆசிரியர் திரு. இ. செ. பத்மநாதன் ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவர்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புனித மரியன்னை பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி, நாளை வியாழக்கிழமை யாழ். பேராலய வளாகத்தில் நடைபெறவுள்ளது.

அருட்திரு. எஸ். ஹில்லறி ஜெபநேசன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விளையாட்டுப் போட்டியில் திருமதி ஜொய்ஸ் பியாற்றிஸ் ஏபிரகாம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (வி)

## ஊர்காவற்றுறையில் புதிய முகாம்

[யாழ்ப்பாணம்]

ஊர்காவற்றுறை கரையோரப் பகுதியிலுள்ள வீடொன்றில் புதிய முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

காரைநகர் கடற்படை முகாமிற்கு எதிர்க்கரையில் இந்த புதிய முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

## பதவி உயர்வு

(சுன்னுகம்)

மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் திரு. க. மகேசவேல் யாழ்ப்பாணம் கோட்டக்கல்வி அலுவலகத்தின் கல்வி அதிகாரிகளுள் ஒருவராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார்.

0 0 0

[மன்னுர்]

அடம்பன் கொத்தணிப் பாடசாலைகளின் இல்லமெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி பாடசாலை அதிபர் திரு. ஜேக்கப் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக மன்னுர் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் கலந்து கொண்டு பரிசில்கள் வழங்கினுர்,

## இராசி பலன்

07 06-1989

சதுர்த்தி மாலை 7-?? வரை. பூசம் முழுவதும். சித்தயோகம். இராகு காலம் 11-52 முதல் 1-26 வரை. சதுர்த்தி விரதம். அவசர கருமங்கள் செய்யலாம்.

மேடம்:- சிறுபிணி, கவலையீனம், மனதில் வெறுப்பு, குடும்பத்தில் பூசல், அதிக செலவு.

இடபம்:- எண்ணங்கள் ஈடேறும், மகிழ்ச்சியான போக்கு, குடும்பசுகம், சகோதரி உதவி.

மிதுனம்: பணச்சிக்கல், மனையாள் வெறுப்பு, அலைச்சல், சகபாடிகள் தொல்லை, தனித்திருத்தல்.

கடகம்:- கடித உறவு, பொருள்லாபம், பதவி மாற்றம், குடும்பத்தில் மகிழ்ச்சி, தொழில் சிறப்பு.

சிங்கம்:- உறவினர்தொல்லை துயரமான செய்தி, தொழில் பாதிப்பு, பழைய நினைவுகள், வெறுப்பு.

கன்னி:- திருமணப்பேச்சு, நடும்பசுகம், காரிய வெற்றி, விருந்துபசாரம், பெரியோர் ஆசி.

துலாம்:- பிரிந்தவர் கூடுவர், செய்தி தடுமாற்றத்தைத் தரும் -பணமுடை, ஏற்மாற்றம்.

விருச்சிகம்:- பகைவர் தொல்லை, வாக்கு விரோதம், மனையாளுக்கு பிணி, நிம்மதிக்குறைவு.

தனுசு:- ஏளனம், பணச் செலவு, குடும்பப்பகை, பிரயாணங்களால் அலைச்சல், தொழில் நஷ்டம்.

மகரம்:- நண்பருதவி, காதல் பிரிவு, கலங்கியமனம், வீட்டில் துன்பம், தொழில் நறைவு.

கும்பம்: எண்ணியவை தவறிப் போதல் மாமனுர் உதவி, மனையில் பிரச்சினை, அசதி,

மீனம்:- இராஜபயம்' தொழில் லாபக்குறைவு, பந்தப்பிரச்சினை. அந்நியவாசம், பகை.

## நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பட்டினசரியிறுப்பாளர் சங்க புதிய நிர்வாகிகள் அண்மையில் தெரிவுசெய்யப்பட்டனர்

தலைவர்: திரு.நீ.ச. யேட்ஸ், உப தலைவர்:ப.வி.கொலின்ஸ், [illegible] செயலாளர்கள் செல்வி [illegible] ஏ. அகஸ்ரின் [illegible] பொருளாளர் எஸ். பி. ஹரியன்.

## பதினேராம் மாத நினைவஞ்சலி



கணேசு விக்னேஸ்வரி (ராதா)

தாயகத்தில்: 24-04-1966

தியாகத்தில்: 03-07-_988

திதி: 22-06-1989

வீரத்திருமகள் ராதாவே
மண்மாதாவின் நெற்றியில்
இட்ட குங்குமம் ஏன்
செந்நிறமாக இருக்கிறது?
உன்னைப் போன்ற தியாகிகள்
சிந்திய குருதியில் அது
மெருகேறியுள்ளது.
எம் மக்கள் சிந்தும் கண்ணீர்
ஏன் ஆருகப் பாய்கிறது?
அது வரலாருக வடிவம்
எடுத்துவிட்டது.
இந்த வரலாற்றுச் சுவடியில்
உன் சுவடுகள்
எங்கள் தடத்தின்
அடுத்த பதிவுகளாகின்றன.

உன் ஆத்ம சாந்திக்கு எங்கள் கண்ணீர்ப்பூக்கள்.

பெற்றேர், நண்பர்கள்.

(ஏ 264)

## மூன்றும் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 08-12-1926

மறைவு: 07-06-1986

திதி: 07-06-1989.

ஆ. செந்தில்நாயகம்

மண்ணும் கடல்வானும் மூடி மறைத்தாலும்
மறக்க முடியாத நினைவுகளை ஈந்துவிட்டு
விண்ணிற் குடியேறிய எம் தெய்வமே!
ஆத்மா சாந்திபெற இறைவனை இறைஞ்சுகிறேம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

83/2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-2911)

## நினைவஞ்சலி



சல்மான்

(யாழ்ப்பாணம்)

உன் உதிரத்தால் சிவந்த இம்மண்மீது உன்
இறுதி மூச்சுக்கலந்த காற்று புயலாக வீசட்டும்
எங்கள் மக்களின் வீரக்கண்களை அவர்கள்—
பார்க்கட்டும்

கோலக்குரலையும் அவர்கள் கேட்கட்டும்
வானத்தின் தூய்மையோடு கம்பீரமாய் நின்றவனே
சுதந்திரத்திற்கான நியாயமான உந்தன்வாதங்கள்
கடலின் குரலோடு கணீரென ஒலிக்கும் வரை
இன்னல்களைத்தாங்கி இழப்புக்களை உயிர்ப்பிப்போம்
செந்தமிழின் விடுதலைக்காய் செந்நீரைச் சிந்தி
கல்லறைத்தெய்வங்களுக்கு காணிக்கையாக்குவோம்

முஸ்லிம் தெரு,
யாழ்ப்பாணம்.

பெற்றேர்களும்,
நண்பர்களும்.

(எ-262)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி பிரேமாவின் கோரிக்கை - பெரும்பான்மை மக்களின் எண்ணத்தைபிரதிபலிக்கிறது

## மகாசங்கம் அறிக்கை

[கொழும்பு]

''எமது நாட்டிலிருந்து இந்திய அமைதிப்படைகள் வெளியேறவேண்டும் என்று எமது மக்களில் பெரும்பான்மையோர் விரும்புகின்றனர். எனவே அமைதிப்படையை இந்தியா வாபஸ்பெற்றுக் கொள்ளவேண்டும்.''

இவ்வாறு மகாசங்கம் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து மகாசங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

''இலங்கைக்கு உரிய காலத்தில் அமைதிப் படைகளை அனுப்பியமைக்கு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு மகாசங்கம் நன்றிதெரிவிக்கும் அதேவேளையில் இப்போது அமைதிப்படைகளை வாபஸ்பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா அமைதிப் படைகளை வாபஸ்பெறுமாறு விடுத்துள்ள கோரிக்கை இலங்கையிலுள்ள பெரும்பான்மை மக்களின் எண்ணத்தையே பிரதிபலிக்கிறது.''

# இலங்கை - இந்திய நல்லுறவுவேண்டும்

[புதுடில்லி]

இலங்கையிலிருந்து இந்தியப் படைகளை வாபஸ்பெறுமாறு இலங்கை ஜனாதிபதி விடுத்துள்ள கோரிக்கை குறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட்பீரோ கவலை தெரிவித்துள்ளது.

இன்னலுற்ற தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பளிக்கவந்த இந்திய அமைதிப் படையினர் தமது பணியைப் பூர்த்தி செய்த பின்னரே வாபஸ்பெற வேண்டும் என்று இக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நல்ல ஜனநாயக உறவுகள் பேணிப் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "வெளிநாட்டுப் படைகள் எமது உரிமைக்கு அச்சுறுத்தல்"

(கொழும்பு)

இந்திய அமைதிப்படைகளை இலங்கையிலிருந்து வாபஸ் பெறவேண்டும் என்ற ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவின் கோரிக்கையை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்றுள்ளது.

நோக்கம் எதுவாக இருந்தாலும் எமது மண்ணில் வெளிநாட்டுப் படைகள் இங்கியிருப்பது எமது மக்களின் குடியுரிமைக்கு ஒரு அச்சுறுத்தலாகும் என்று கம்யூனிஸ்ட் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

# கண்ணீர் அஞ்சலி



**ரமேஷ் (டெஸ்மன்)**
(திருகோணமலை)

| தாயின் மடியில்: | தாயக மண்ணில்: |
| --- | --- |
| 30-01-1970 | 14-05-1989 |

சுதந்திரத்தைத் தேடித் துயிலா திருந்தவன்-இவன்
திருமலை தந்த தியாக மைந்தன்
மண்ணையும் மானிடத்தையும் நேசித்ததால்
மரணத்தைத் தழுவிய மறத்தமிழா
தடைகள் எதுவரினும்
சற்றும் தளர்வின்றி—உம்
பாதை வழி வந்து எம் பயணம்
தொடர்ந்திடுவோம்.

**பெற்றோரும், நண்பர்களும்.**

காளிகோவிலடி,
திருமலை.

(ஏ 263)

# "இந்திய அமைதிப் படையை வெளியேறுமாறு கோருவது ஒப்பந்தத்தை மீறும்செயல்"

[யாழ்ப்பாணம்]

''இந்திய அமைதிப்படையை எதிர்வரும் ஜுலை 29ந் திகதிக்கு முன்பு வெளியேற வேண்டும் என்று ஜனாதிபதி பிரேமதாசா ஒருதலைப்பட்சமாக அறிவித்துள்ள முடிவு எந்தவிதத்திலும் எங்களைக் கட்டுப்படுத்தாது. இது ஒப்பந்தத்தை மீறும் செயல்.''

இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. க. பத்மநாபாவும், ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் திரு. ஞானசேகரனும் இணைந்து சென்னையில் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''எதிர்வரும் ஜுலை 29ந் திகதிக்கு முன்பு அமைதிப் படை வெளியேறவேண்டும் என்று ஜனாதிபதி பிரேமதாசா ஒருதலைப்பட்சமாக அறிவித்துள்ளார். அவரின் இந்த முடிவு எந்தவிதத்திலும் எங்களைக் கட்டுப்படுத்தாது என்பதை நாங்கள் தெளிவுபடுத்த விரும்புகிறோம். ஜனாதிபதி பிரேமதாசாவின் இந்த முடிவானது; இலங்கை இரண்டுபடுவதிலேயே முடியும். எத்தகைய முடிவையும் எடுப்பதற்கான சுதந்திரம் தனக்கு இருக்குமென இலங்கை அரசு கருதும் பட்சத்தில், ஏனையோருக்கும் இத்தகைய சுதந்திரம் உண்டு என்பதை இலங்கை அரசு உணரவேண்டும். இலங்கையின் வடகிழக்கு மாகாணத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம், செயற்பட்டு வந்தபோதிலும் இதுபோன்ற முடிவுகள் எடுப்பது தொடர்பாக மாநில அரசாங்கத்துடன் மத்திய அரசாங்கம் எந்தச் சந்தர்ப்பத்திலும் கலந்து ஆலோசிக்கவில்லை. இலங்கை அரசு இந்த முடிவினைத் தன்னிச்சையாக அறிவித்துள்ளது. அதுமட்டுமல்லாமல், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலும்; இலங்கை அரசின் வேண்டுகோளின் பேரிலும்தான் இந்திய அமைதிப் படையானது வடக்கு கிழக்கு மாகாணத்தில் அமைதியை நிலைநாட்டவும்; தமிழ் மக்களைப் பாதுகாக்கவுமே இலங்கைக்கு வந்தது. ஆனால் தமிழ் மக்களின் பாதுகாப்பை நிராகரித்துவிட்டு, தனது தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள மாத்திரமே ஜனாதிபதி விரும்புகிறார். இலங்கை அரசானது, இந்தியாவைக் கூடக் கலந்தாலோசிக்காமல், இப்படியொரு முடிவை எடுத்துள்ளது. இ[illegible] தேச நீதி நியாயங்களுக்குப் விரோதமான போக்காகும் என்பதுடன்; மாபெரும் நம்பிக்கைத் துரோகமும் ஆகும்.

''வடக்கு கிழக்கு மாகாண சபை அமைக்கப்பட்டு, ஆறு மாத காலத்திற்கு மேலாகியும் கூட ஒப்புக்கொள்ளப்பட்ட அதிகார மாற்றங்களைச் செய்யாமல், இழுத்தடிக்கும் போக்கை இலங்கை அரசு கடைப்பிடித்து வருகிறது. தமிழ் மாகாண அரசுக்குரிய அதிகாரங்களை வழங்கித் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கான முறையான ஏற்பாடுகள் செய்யப்படும்வரை இந்திய அமைதி காக்கும் படை வெளியேறுவது என்பதனை நாம் ஏற்றுக் கொள்ளமுடியாது. இலங்கை அரசினது இராணுவமும், பொலிஸும் எமது மக்களுக்கு இழைத்த கொடுமைகள் அனைத்தையும், தமிழ் மக்கள் மறந்துவிடவில்லை. வடக்கு கிழக்கு இணைந்த தமிழ் மாகாணத்திற்குள் இலங்கை இராணுவமும், பொலிஸும் நுழைவதை எமது மக்கள் விரும்பவில்லை. இதன் காரணமாகத்தான் எமது மக்கள் இந்திய - இலங்கை அமைதி காக்கும் படையையும் வரவேற்றுள்ளனர். சமாதானம் மீண்டு கிடைக்கவும், ஜனநாயகச் சூழல் ஏற்படவும்; இந்திய அமைதிப்படைமீது நம்பிக்கை வைத்தனர். எமது மக்களின் நம்பிக்கையைச் சிதறடிக்கும் நோக்கத்தோடு இலங்கை அரசு செயற்படுமானால்; அதனைத் தக்கபடி சந்தித்து முறியடிக்க எமது மக்கள் தயாராகவே உள்ளனர்.'' இவ்வாறு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## குழப்பங்களின்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

னேற்றகரமான பொருளாதார செயலாக்கத்துக்கு வேளாண்மைத் துறையின் மீட்சியும், தயாரிப்புத்துறையில் ஏற்பட்ட தொடர்ச்சியான வளர்ச்சியுமே முக்கிய காரணங்களாக விளங்கின.

## ஆஸ்திரேலிய உதவி

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாவட்டங்களில் அவசர புனர்நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஆஸ்திரேலிய அரசாங்கம் முப்பது லட்சம் ஆஸ்திரேலிய டாலர்களை உதவியாக வழங்க முன்வந்திருக்கிறது.

மேற்படி தொகை நான்கு வருடகாலத்துக்கு வழங்கப்படும்.

இது சம்பந்தமான ஒப்பந்தம் ஒன்று இலங்கை அரசாங்கத்துக்கும் ஆஸ்திரேலிய அரசாங்கத்துக்குமிடையில் கைச்சாத்திடப்பட்டது.

# ஆரோக்கிய வாழ்வுக்கு வழிகோலும் யோகம்



எனது வாழ்வுக்கு வழி செய்துதந்த என்குருநாதர் ஓர் கால் என்னை விழித்து ''சுவாமி இலங்கைவாழ் மக்களின் அகப்புறத் தூய்மை நனிசிறக்க, ''யோகம் பிராணயாமம் இவைகளை அவர்களுக்குக்கூறி வைத்து மக்களின் வாழ்வை நீ என்றும் நிறைவு செய்வாயாக'' என்று அருள்மொழி கூறித்தந்த பிரசாரம் நான் எனது கடமையை 1970 ஆம் ஆண்டிலிருந்து என்னை அண்டி வரும் மக்களுக்கு எவ்வித களங்கமுமின்றி அவர் இட்ட கட்டளையை முறைசெய்துவருகிறேன்.

உங்கள் ஒவ்வொருவரையும் நான் வேண்டிக்கொள்வது; இந்த ஆத்மீக வாழ்க்கையில் நீங்களும் ஒத்துழைத்து உங்கள் ஒவ்வொருவரின் உள்ளங்களிலும் படர்ந்துநிற்கும் எண்ணங்கள், கவலைகள், உங்களைப் பீடித்துப் பின்தொடர்ந்துவரும் நோய்கள் இன்னோரன்ன கொடிய வேதனைகளில் நின்றும் விலகிக்கொண்டு, மனத்தூய்மையுடனும், உளச்சாந்தியுடனும் வாழ்வை வழி நடத்த சித்தசுத்தி பெற வழி தேடுங்கள். இதனால் உங்கள் பின் சந்ததிகளும் நல்வழி ஆரோக்கிய நிலையில் வளர்ந்து வர வழிபிறக்கும்.

ஐந்து வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் முதல் வாலிபமடைந்தோர், வயோதிபம் எய்தினோர் யாவரும் நோய் வாய்ப்பட்டுப் படுக்கையில் இருக்கும் காலமானாலும் சரி, மிக எளிமையாகச் செய்து உடலையும் உள்ளத்தையும் உறுதி செய்வது மட்டுமல்லாமல், உங்களைப் பீடித்து ஔஷதத்திற்குக் கட்டுக்கடங்காது காலம் தாழ்த்தும் நோய்கள் கூட ஆதவனைக் கண்ட பனி போல் நீங்கி நீங்கள் சுகவாழ்வு வாழக்கூடிய வழிசெய்யக்கூடிய அரிய பொக்கிஷம் ஆன்றோர் எமக்களித்த இந்த ஆசனவழிகள் ஒன்றேயாகும். இதனை நீங்கள் காலை மாலை நெறி தவறாது உங்கள் வசதிக்கேற்றவாறு பயிற்சி செய்து வருவீர்களானால், உங்கள் உள்ளங்களும் தூய்மையடைந்து, இரத்த நாளங்கள் சுத்திகரிக்கப்பெற்று நாளடைவில் நல் ஆரோக்கிய வாழ்வை என்றும் பெறுவீர்கள்.

— சுவாமிஜி
ஸ்ரீ சிதானந்தயோகி.

[வளரும்]

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சரவணை - பள்ளம்புலம் முருகமூர்த்தி கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 10ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. 18ம் திகதி தேரும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை கரம்பன் கிழக்கு சாந்தையம்பதி ஆலய ஸ்ரீ காளிகா புவனேஸ்வரி அம்பாள் புனர் நிர்மாண அஷ்டபந்தன விழாவும், விக்கினேஸ்வரப்பெருமான், பாலசுப்பிரமணியர் திருக்கோயில் பிரதிட்டையும் கூடிய மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 14ம் திகதி காலை நடைபெறவுள்ளது.

## 6 ஆயிரம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இனக்கலவரங்களில் நூற்றுக்கணக்கானோர் பலியாகினர் என அறிவிக்கப்பட்டுள்ளபோதிலும் மேலதிக விபரங்களை வெளியிட சோவியத் அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயினாதீவு செல்லும் பக்தர்கள்

# கடற்படை முகாமில் சோதனை

(வேலணை)

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய கொடியேற்ற வைபவத்திற்கு பெருந்தொகையான யாத்திரிகர்கள் வந்திருந்தனர்.

திருவிழாவை ஒட்டி வட பிராந்திய போக்குவரத்துச் சபை குறிகாட்டுவான் இறங்குதுறை வரை அதிக பஸ்களை சேவையில் ஈடுபடுத்தியுள்ளது. தனியார் பஸ்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

குறிகாட்டுவான் இறங்குதுறையில் இருந்து நயினாதீவு இறங்குதுறை வரையும் போதிய படகுசேவைகளும் நடைபெறுகின்றன.

நயினாதீவு இறங்குதுறைக்கு செல்லும் படகுகளும் அங்கிருந்து திரும்பும் படகுகளும் நயினாதீவில் முகாமிட்டிருக்கும் இலங்கை கடற்படை துறைமுகத்திற்குச்சென்று சோதனை செய்யப்பட்ட பின்னரே பிரயாணத்தைத் தொடர அனுமதிக்கப்படுகின்றன.

கொடியேற்றத்தின்போது பக்தர்களிடமிருந்து நகைகள் களவாடப்பட்ட பல சம்பவங்கள் இடம்பெற்றதை அடுத்து பக்தர்கள் தமது உடைமைகளில் கவனமாக இருக்கும்படியும், நகைகளை அணிந்து கோவிலுக்கு வரவேண்டாம் என்றும் கேட்கப்பட்டுள்ளனர். உற்சவ காலத்தில் தினமும் பக்தர்களுக்கு வழமைபோல் நயினாதீவு அமுதசுரபி அன்னதான சபை, அன்னதானம் செய்துவருகிறது.

## 'இளமையில் கல் சிலையில் எழுத்து'

(மாவிட்டபுரம்)

''ஆரம்பக் கல்விக்கு நாம் முக்கியத்துவம் கொடுத்து இளைஞ்சிறுர்களை சிறுவயதிலிருந்தே நன்ருக பயிற்றுவிக்க வேண்டும், அதன் மூலம்தான் அவர்கள் எதிர்காலத்தில் சிறந்த கல்விமான்களாகவும் நற்பிரஜைகளாகவும் விளங்க வழிபிறக்கும்''

இவ்வாறு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஆசிரியையாகக்கடமையாற்றிய திருமதி நேசம்மா செல்லத்துரையின் பிரிவுபசார சேவை நலம் பாராட்டு விழாவில் பேசிய கல்லூரி அதிபர் திரு. என். ஸ்ரீபுஷ்பநாதன் கூறினுர்.

இவர் மேற்படி கல்லூரியில் 36 வருடங்கள் ஆசிரியையாகப் பணி புரிந்துஒய்வு பெறுகிருர்.

## நாமகள் படிப்பகம்: 'பிரதேச சபை உதவும்'

[புலோலி]

'கரவெட்டி கிழக்கு நாமகள் படிப்பகத்தின் வளர்ச்சியில் பலரும் அக்கறையும், விருப்பமும் கொண்டிருப்பதை அவதானிக்கமுடிகிறது. இப்படிப்பக வளர்ச்சிக்கு போதிய உதவிகளைவழங்க வடமராட்சி தென்மேற்குப் பிரதேச சபை இயன்ற உதவிகளை வழங்கும்.

இவ்வாறு வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை நிர்வாக அதிகாரி திரு. க. சுப்பிரமணியக் குருக்கள் கரவெட்டி கிழக்கு நாமகள் சனசமூகநிலையத்தின் வருடாந்தப்பொதுக்கூட்டத்தில்கலந்து கொண்டு பேசுகையில் உறுதியளித்தார்.

இக்கூட்டத்தில் பின்வருவோர் புதுவருட உத்தியோகத்வர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்! ஆ. நமசிவாயம், தலைவர்: நா. கணேசசிங்கராசா, உப தலைவர்கள்: வே. செல்லத்துரை, நா. தெட்சணமூர்த்தி, செயலாளர்: ந. சிவசீலன், உப செயலாளர்: ந. செவ்வேள், பொருளாளர்: கா. வேலாயுதபிள்ளை, நூலகப் பொறுப்பாளர்: க. பரராசசிங்கம், உதவி நூலகப் பொறுப்பாளர்: க. இளங்கீரன்.

## அந்தோனியார் திருவிழா

(மன்னுர்)

தள்ளாடி புனித அந்தோனியார் திருவிழா இம்மாதம் 10ம், 11ம், 12ம், திகதிகளில் விசேட வழிபாடுகளுடன் நடாத்தப்படும். 13ம் திகதியன்று மன்னுர் ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்திர நாயகம் அடிகளார் பலிப்பூசை ஒப்புக்கொடுப்பார்.

## நவாலி

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களது அன்பாலும் அரவணைப்பாலும் அவர்கள் செய்யும் தியாகங்களை நாம் மறவாது அவர்களை தெய்வமாக வழிபட வேண்டுமென்றும், அவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

கவியரங்கம், திருமறை வசனங்கள், அறிஞர் வைற்றுக்கள் முதலியனவும் இடம்பெற்றன.

இப்பாடசாலையில்கல்வி பயிலும் பிள்ளைகள், தாய்மார்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. பாடசாலை துணை அதிபர் திரு. ஜி. அன்னப்பா நன்றியுரை கூறினுர்.


## ஹரன் சினிமா (யாழ்ப்பாணம்)

வெற்றிகரமாகக் காட்சியளிக்கிறது

தினசரி 10-30—2-30

சத்தியராஜ்—பிரபு—நதியா

சுதாசந்திரன்—விஜயன்

நடித்த



# சின்னத்தம்பி·பெரியதம்பி


## பம்பாய் வெங்காயச் செய்கைக்கு விவசாயிகள் ஒத்துழைக்க வேண்டும்

[யாழ்ப்பாணம்]

''பாண்டியன்குளப்பகுதியில் பம்பாய் வெங்காயச் செய்கையைத் திட்டமிட்ட ஐம்பது ஹெக்டரிலிருந்து நூறு ஹெக்டராக அதிகரிப்பதற்கு அடுத்த போகத்தில் விவசாயிகள் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும்'' என்று முல்லைத்தீவு மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் திரு. இ. இரகுபதி தெரிவித்தார்.

வெங்காயச் செய்கை பற்றி வவுனிக்குளத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினுர்.

விவசாயப் போதனுசிரியர் திரு. ஆ. சபர்நாதன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் திரு. இ. இரகுபதிமேலும் பேசுகையில் கூறியதாவது:

''பம்பாய வெங்காய இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் வெங்காயச் செய்கையில் விவசாயிகள் இம்முறை கூடிய இலாபமடைய முடியும். இதற்கு விவயாய உத்தியோகத்தர்கள் எப்பொழுதும் உதவத் தயாராக இருக்கிருர்கள்.

பாடவிதான உத்தியோகத்தர் திரு. எஸ். தில்லையம்பலம், விவசாயஉத்தியோகத்தர் திரு. கே. எஸ். நடராசா ஆகியோரும்கருத்துரை வழங்கினுர்கள்.

## ஹாட்லிக்கு முத்திரை வெளியிட்டது பெருமைக்குரியது

[பருத்தித்துறை]

''ஹாட்லிக் கல்லூரியின் தனித்துவத்தையும், சரித்திரத்தையும் ஆராய்ந்த தபால் திணைக்களம் ஹாட்லியின் 150வது ஆண்டு நிறைவைக் கௌரவிக்குமுகமாகத் தபால் முத்திரையொன்றை வெளியிடத் தீர்மானித்தது பெருமைக்குரியது''.

இவ்வாறு பருத்தித்துதை ஹாட்லிக் கல்லூரியின்150வது ஆண்டு நிறைவையொட்டித் தபால் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 75 சத முத்திரையை மாணவர்களுக்குக் கல்லூரியில் வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பருத்தித்துறை பிரதம தபாலதிபர் திரு. ஏ. கணபதிப்பிள்ளை குறிப்பிட்டார்.

கல்லூரி உப அதிபர் திரு. எஸ். பொன்னம்பலம் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

முதலாவது முத்திரையை கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் சட்டத்தரணி ஆர். உருத்திராவிட மிருந்து கல்லூரியின் பழைய மாணவர் சங்கச் செயற்குழு உறுப்பினர் திரு. எஸ். காராளசிங்கம் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து உரையாற்றிய தபாலதிபர் கணபதிப்பிள்ளை குறிப்பிட்டதாவது:-

''தபால் முத்திரைகள் தேசிய வீரர்கள், பெரியார்கள், மிக முன்னணியில் திகழும் கல்லூரிகள் போன்றவற்றிற்கே தபால் திணைக்களத்தால் வெளியிடப்படுகின்றன. எமது பகுதியைப் பொறுத்தவரையிலே அமரர். ஜீ. ஜீ. பொன்னம்பலத்திற்கு முதலாவது முத்திரை வெளியிடப்பட்டது. இரண்டாவது முத்திரையைப் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பெற்றுப் பெருமையை நிலைநாட்டியுள்ளது''.

வடமராட்சி கோட்டக்கல்வி அதிகாரி திரு. எஸ். வீரபத்திரன் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

''பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பல்வேறு நடவடிக்கைகளினும் முன்னணியில் திகழும் கல்லூரியாகும், இக்கல்லூரி பல்வேறுதுறைகளிலும் பெருந்தொகையான வல்லுநர்களை உருவாக்கிய பெருமையைத் தட்டிக்கொண்டுள்ளது.

இக்கல்லூரி தொடர்ந்தும் அதன் தனித்துவத்தையும் பெருமையையும் கட்டிக்காத்து கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளில் முன்னணியில் திகழவேண்டும்''.

இவ்வாறு அவர் கூறினுர்.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு. கே. வி. செல்வராஜன் நன்றியுரை வழங்கினுர்.

## உணவு முத்திரை வழங்க ஏற்பாடு

(மண்டைதீவு)

தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உணவுமுத்திரைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சடாச்சர சண்முகதாஸ் இதற்கான நடவடிக்கைகளை அவ்வவ் பகுதி கிராமசேவை அலுவலர்கள் மூலம் செய்து வருகின்றுர்கள்.

தீவுப்பகுதி தெற்கில் உணவு முத்திரைகள் வழங்கத்தகுதியுடையவர்களது பட்டியல் படி உணவுமுத்திரைகள் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. பட்டியல்படி பதிவு வேலைகள் நடைபெறுகின்றன. ஒருவார காலத்தில் இவை உரியவர்களுக்கு வழங்கப்படும் விடும்எனத் தெரிய வருகிறது.

## வரட்சியால் பாதிப்பு

(புங்குடுதீவு)

பருவமழை பெய்யாததிஞல் புங்குடுதீவில் கடும் வரட்சி ஏற்பட்டிருக்கிறது. இதனுல் இப்பகுதியில் தண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

வேலணை துறையூர் மக்கள் குடிநீரைப் பெறுவதற்குப் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றுர்கள். என்று தெரியவருகிறது.

சாட்டியிலிருந்து பைப்மூலமாக வழங்கப்படுகின்ற நன்னீரையும் பெறுவதற்கு பல மணித்தியாலங்களாக வீதிகளில் இருந்து நூற்றுக்கும் அதிகமான குடங்களை அடுக்கிகொளுத்தும் வெயிலில் இருந்து தண்ணீரைப் பெற வேண்டிய நிலையில் மக்கள் உள்ளனர்.

## தினமும் ஒரு சத்துணவு வழங்கும் பாடசாலை

(யாழ்ப்பாணம்)

மந்துவில் அரசினர் ஞே. க. பாடசாலையில் தினமும் வெவ்வேறு வகையான சத்துணவு மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

மேற்படி பாடசாலை அதிபர் திரு. க. கதிரேசுவின் முயற்சியினுல் நாளொரு சத்துமிக்க உணவு வகைகளை மாணவர் உட்கொண்டு வருகிருர்கள்.

சிறுவர்களுக்கு ஒரு வகை உணவும், வளர்ந்தோருக்கு இன்னெரு வகை உணவும் வழங்கப்படுகிறது.

தரமான முறையில் இந்த மதிய உணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிபரை இப்பகுதியிலுள்ள பெற்ருர்கள், நலன் விரும்பிகள் பாராட்டியுள்ளார்கள்.

# மனிதனை மனிதன் மதிக்கும் நிலை ஏற்படவேண்டும்!

(மமட்டுவில்)

''ஒவ்வொரு மனிதனும், தன்னுடைய வாழ்க்கைக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை, பிறருக்கும் கொடுப்பதே உண்மையான பணிவுக்குட்பட்ட பண்பாகும்.

மனிதனை மனிதன் மதிக்கும் நிலையைப் பணியால் மட்டுமே சம்பாதித்துக் கொள்ள முடியும். அன்பு பணிவு, மாசற்ற உள்ளம், பெரியோரைக் கனம்பண்ணல், சுகாதாரம் போன்ற மனித வாழ்வுக்கு அடிப்படையாக உள்ள வாழ்க்கைத் தத்துவங்களை போதிப்பதே இந்து மதத்தின் தத்துவங்களாகும்''

இவ்வாறு மீசாலை விக்னேஸ்வர வித்தியாலய உப அதிபர் திரு. செ. சுப்பிரமணியம், விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நடத்திய மத உபந்நியாசத்தின் போது கூறினுர்.

அவர் மேலும் கூறியதாவது:

மனிதனை மனிதன் அன்பால் நேசிக்க வேண்டும். உயர்த்த வார்த்தைகளால் அளவளாவ வேண்டும். மாதா பிதா, குரு தெய்வ வணக்கம் இவை மூலமே சிறந்த ஒரு நல்ல சமுதாயம் உருவாக்க முடியும்.

அம்மை அப்பன், விநாயகர் முருகனுக்கு மாங்கனி கொடுத்த கதை எதை மனிதனுக்கு உணர்த்துகிறது? அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம் என்பதைத்தான் இந்த அடிப்படை வாழ்வை நாம் கடைப்பிடித்து வாழ்ந்தால் ஆணவம் கன்மம், மாயை என்ற மலங்களில் சிக்கி சீரழிய மாட்டோம் என்றும் அவர் சொன்ர்.

## பரு. ஆஸ்பத்திரியில் சிற்றூழியர் பற்றுக்குறை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை சுகாதார வைத்தியசாலையில் சிற்றூழியர்களுக்கான பற்றுக்குறை நீண்டகாலமாக நிலவி வருவதாக அரசாங்க சுகாதார சேவைத் தொழிற்சங்க வடமராட்சிக் கிளை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது; இந்த வைத்தியசாலையில் சிற்றூழியர் பற்றுக்குறை நிலவுவதனுல் வேலை செய்யும் ஊழியர்கள்சொந்த லீவைப்பெற முடியாமல் கஷ்டப்படுகிருர்கள். அதேவேளையில் வேலைப் பழுகாரணமாக ஊழியர்களிடையே அதிருப்தி நிலவுகிறது.

இவ்வைத்தியசாலையில்ஒரு சிற்றூழியர் மேற்பார்வையாளரே கடமையிலுள்ளார். எனவே மேலுமொரு மேற்பார்வையாளர் நியமிக்கப்படவேண்டும் என்றும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் சீருடைகள் விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் சம்பந்தப்பட்டவர் இச்சங்கம் கோரியுள்ளது.

## கடன் வசதி

(மண்டைதீவு)

மண்டைதீவு பனம்பொருள் உற்பத்தியாளர் ஐக்கிய நாயண சங்கம் இப்பகுதியில் வீடு திருத்துதல், வீடு பூர்த்தி செய்தல் ஆகியவற்றிக்கு கடன் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இக் கடன் பெறுவதற்கு விண்ணப்பித்த இச்சங்க உறுப்பினர்களது விண்ணப்பங்களில் ஆறுபேருக்கு வீடமைப்புக்கடன் வழங்குவதற்கு சங்கம் சிபார்சு செய்துள்ளது. இதில் ஒருவருக்கு அன்மையில் காசோலை வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பழுதடைந்த நிலையில் எக்ஸ்ரே கருவிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனு வைத்திசாலையில் உள்ள நான்கு 'எக்ஸ்றே' கருவிகளில் ஒன்று மட்டுமே தற்போது செயல் படுவதாகவும் அதுவும் முழுமையாகப் படம் பிடிக்கத்தக்க கருவியாக இல்லை என்பதால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர்.

நோயாளரின் சகல அவயவங்களையும் படம் பிடிக்கும் 'எக்ஸ்றே' கருவிகளில் ஒன்று மூன்று வருடங்களாகப் பழுதடைந்த நிலையில் இருப்பதாகவும் மற்றைய கருவி தற்போது ஒருவார காலமாகப் பழுதடைந்த நிலையில் உள்ளதாகவும் நெஞ்சை மட்டும் படம். பிடிக்கத்தக்க கருவி கடந்த ஆறுமாத காலமாகப் பழுதடைந்து இருக்கிறது என்றும் ஆஸ்பத்திரி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த எக்ஸ்றே கருவிகளை திருத்தம் செய்வதற்கு போதனு வைத்தியசாலை அதிகாரிகள் பலதடவை தொடர்பு கொண்ட போதிலும் இவைகளைத் திருத்துவதற்கு கொழும்பிலிருந்து ஊழியர்கள் யாழ்ப்பாணம் வருவதற்குத் தயங்குகிறார்கள் என்று தெரியவருகிறது.

யாழ். போதனு வைத்திய சாலையில் நாளாந்தம் சகல நோயாளர்களையும் உள்ளடக்கி சராசரி முந்நூறு எக்ஸ்றே படங்கள் எடுக்கப் படுவது குறிப்பிடத்தக்கது.

யாழ்.போதனு வைத்திய சாலையின் எக்ஸ்றே இயக்குனர்கள், தொழில் நுட்பவியலாளர்களின் திறமைகளினுல் தான் இதுவரைகாலமும் ஓரளவு பழுதடைந்த நிலையில் இருந்த இக்கருவிகளைக் கொண்டு படங்கள் எடுக்கப் பட்டன ஆயினும் குறித்த மூன்று எக்ஸ்றே கருவிகளும் இனி எந்தவகையிலும் இயங்க முடியாத நிலையிலிருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. தற்போது தினமும் 35 படங்கள் மட்டுமே எடுக்கக் கூடியதாயுள்ளது. (கு)

## பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம்

(யாழ்ப்பாணம்)

உயர் கல்வியமைச்சில் பதிவு செய்து கொள்ளும் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் பதவிகள் வழங்கப்படவுள்ளன.

கலை, விஞ்ஞானப் பட்டப் படிப்பை முடித்துள்ளவர்கள் உடனடியாகத் தமதுபெயரை உயர் கல்வியமைச்சில் பதிவு செய்யும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## தெற்கே தொடரும் தாக்குதல்: ஒன்பது பேர் பலி!

(கொழும்பு)

தென்பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இருவெவ்வேறு தாக்குதல் சம்பவங்களில் ஒன்பதுபேர் கொல்லப் பட்டுள்ளனர். இவர்களில் நான்கு பேரினது சடலங்கள் எரிந்து கருகிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

காலியில் இடம்பெற்ற சம்பவமொன்றில் ஐ. தே. கட்சியின் முக்கிய ஆதரவாளர் ஐவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதேவேளை மீரிகம பகுதியில் கம்பஹா மீரிகம வீதியில் நான்கு சடலங்கள்எரிந்து கருகிய நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

கடந்த இரு வாரங்களில் தென்பகுதியில் இடம்பெற்ற பல சம்பவங்களில் எண்பதிற்கும் மேற்பட்டோர் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டுள்ளதாகவும் பொலிசார் அறிவித்துள்ளனர்.

## யாழ். அரசாங்க அதிபரை கிராமசேவை அலுவலர்கள் சங்கப்பிரதிநிதிகள் சந்திப்பு

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த கிராமசேவை அலுவலர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் இன்று புதன்கிழமை யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரை அவரது அலுவலகத்தில் சந்தித்து உரையாடவிருக்கின்றனர். மேற்படி சங்கத்தின் முக்கிய உறுப்பினர் ஒருவர் நேற்று இத்தகவலைத் தெரிவித்தார்.

கிராம சேவையாளர்களது கடமைகளில் செயல்படுத்தப் படவேண்டிய சில நடைமுறைகள் பற்றியும், கடமைகளை நிறைவேற்றுவதில் ஏற்படும் நடைமுறைச் சிக்கல்கள் பற்றியும் நிர்வாக நடைமுறைகள் சம்பந்தமாகவும் இவர்கள் அரச அதிபருடன் தமது கருத்துக்களை மனம் விட்டுப் பேசவிருப்பதாகவும் தெரியவருகிறது.

### இந்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை இராணுவத்துக்கு புதிதாக சேர்த்துக்கொள்ளப் படவிருக்கும் படைப்பிரிவுக்குத் தேவையான யுத்த உபகரணங்கள், ஆயுதங்கள், தளபாடங்கள் முதலியவற்றைக் கொள்வனவு செய்வதற்கே 200 கோடி ரூபா செலவிடப் படவுள்ளது என்று தெரிவிக் கப்பட்டது.

இவற்றுக்கான கொள்வனவுக்கென சர்வதேச மட்டத்தில் விரைவில் 'ரெண்டர்கள்' கோரப்படவுள்ளது என்றும் இராணுவ வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

தெற்கில் நிலைமைகள் மோசமாக இருப்பதனை அடுத்து, மேலதிக இராணுவம் தேவைப் படுவது பற்றியும் இராணுவத்துக்கான செலவீனங்களுக்கு மிக விரைவில் நிதி வழங்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் இம்மகாநாட்டில் ஆராயப்பட்டதாகவும் தெரிகிறது.

புதிய இராணுவபிரிவுக்கு தேவைப்படுவதாகக் கணிக்கப்பட்ட தொகை 200 கோடி ரூபாவுக்கு மேல் என்றுகாணப் படுகிறது. எனினும் இந்த நிதியைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக பிரச்னைகள் காணப்படுவதாகவும் தெரியவருகிறது.

### மீனவர் மீது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதாகவும், இருவர் ஸ்தலத்திலேயே பலியானதாகவும் ஏனையோர் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இச்சம்பவத்தையடுத்து கடந்த சனிக்கிழமை கல்முனையில் தமிழர்கள் சிலர் தாக்கப்பட்டனர். சிலகடைகள் சேதமாக்கப்பட்டன.

### மட்டுவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுக் கொண்டே இருந்தன.

சந்தேகத்தின் பேரில் பலர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட் படுத்தப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இது இவ்வாறிருக்க நேற்றுமுன்தினம் போடப்பட்டிருந்த கைதடி, நாவற்குழி வீதித்தடைகள் அகற்றப் படாமையினுல் வாகனங்கள் யாவும் கேரதீவு வீதியூடாக தமது பயணத்தை தொடர்ந்தன.

### நெல்லியடியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னேட்' வீசியதைத் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டதாகவும் 'கிரனேட்' வீச்சினுல் சேதம் ஏதும் பெரிதாக ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப் பட்டது.

சிலமணி நேரத்தின் பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது.

### அச்சுவேலி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டிக்காடு என்னுமிடத்தில் நடைபெற்ற மோதலில் இறந்தவர்களுக்கும் படுகொலை செய்யப்பட்டு வீடுகள் எரிக்கப்பட்டமைக்கும் கண்டனம் தெரிவித்து ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

### வடமராட்சியில்

(வடமராட்சி நிருபர்)

புத்தூரில் நிகழ்ந்த அசம்பாவிதங்களுக்கு அனுதாபமும், அஞ்சலியும் தெரிவித்து நேற்று வடமராட்சிப் பகுதியில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்கள் யாவும் பூட்டப்பட்டதுடன் வாகனங்கள் எதுவும் சேவையில் ஈடுபடவில்லை,

வடமராட்சிப் பகுதியில் பாடசாலைகளில் மாணவர் வரவு குறைவாகக் காணப் பட்டது.

### 6 பேர் மரணம்

இதே நேரத்தில் புத்தூர் பகுதியில் நடந்த நேரடி மோதலில் தமது இயக்கத்தைச் சேர்ந்த நேரு, குட்டி, ஆகியோரும், வரணியில் இடம்பெற்ற மோதலில் சங்கிலி, அசாத், கருணு, உமைநேசன் ஆகியோரும் உயிரிழந்ததாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளன.

கடந்த 5-ம் திகதி இந்தச் சம்பவம் நடந்தது.

### அமைதிப்படை வெளி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று இந்திய வெளியுறவு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியை நேற்று முன்தினம் சந்தித்து ஜனுதிபதி பிரேமதாஸாவின் விசேட செய்தியை கையளித்த திரு. திலகரட்ண, படையினர் வாபஸ் குறித்து பல மணி நேரம் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் பேச்சுகள் நடாத்தினுர்.

நேற்று இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவை சந்திக்கவிருந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணங்களால் சந்திப்பு இடம்பெறவில்லை.

இதற்கிடையில் இந்திய அரசுடன் மீண்டும் ஓர்உடன்படிக்கை செய்வதன் மூலமே இந்திய அமைதிப்படையை திருப்பி அனுப்பமுடியும். வேண்டுகோள் மூலம் அமைதிப்படையை திருப்பி அனுப்ப முடியாது'' என்று தேசாபிமான பொது 'முன்னணி' தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பு நேற்று முன்தினம்கொழும்பில் பத்திரிகையாளர் மாநாட்டை நடத்திய போதே மேற்படி கருத்தை வெளியிட்டது.

## போக்குவரத்துவிதிகள் இன்றுமுதல் அமுல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கில் போக்குவரத்து வீதி ஒழுங்கு விதிகளை மீறும் வாகனங்களுக்கு எதிராக இன்றுமுதல் பிரஜைகள் தொண்டர் படையினர் நடவடிக்கை எடுப்பர்.

மாகாண சபை இதற்கான பணிப்புரைகளை வழங்கியுள்ளது.

லைசென்ஸ் இல்லாமல் வாகனங்களை ஓட்டுபவர்கள், போக்குவரத்து வீதி ஒழுங்கு முறைகளை மீறுபவர்களுக்கு எதிராகவே நடவடிக்கை எடுக் கப்படவுள்ளது.

### பல்கலைக்கழக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். பல்கலைக்கழகத்திலுள்ள அனைத்து பீடங்களிலும் நேற்று விரிவுரைகள் நடைபெற்றன.

இதேவேளை ஊழியர்கள் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர்ந்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள்,

இதே நேரத்தில் மருத்துவ பீட மாணவர்களுக்கு பரீட்சைகள் நடைபெறுகின்றன. கலை, விஞ்ஞானபீட மாணவர்களுக்கு விரிவுரைகளும் நேற்று நடைபெற்றன.

### கடந்த சில

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காணுமல் போயுமுள்ளனர்.

முன்னணியின் கொள்கைக் கும்கட்டுப்பாடுகளுக்கும்இணைந்து செயல்பட விரும்பினுல் ஜே. வி. பி. இயக்கத்தையும் சேர்த்துக்கொள்வோம்'' என்றும் கூறியுள்ளது.

### அமைதிப்படை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாசா இப்படியான அறிக்கையை வெளியிடுவதற்குமுன்னர் இந்திய அரசுடனே, மாகாண அரசுடனே கலந்தாலோசிக்காதது துரதிர்ஷடவசமானது,' என்று தெரிவித்தார்.

இந்தத் தீர்மானத்தை ஆதரித்து சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், முஸ்லிம்காங்கிரஸ் உறுப்பினருமான ஜனுப் சேகு இஸ்ஸாதீன் பேசுகையில், ''வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் செய்யப்பட்டு மாகாண சபைக்கு அதிகாரம் வழங்கப் படும்வரை அமைதிப்படை வாபஸ் பெறக்கூடாது'' என்ருர்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலிருந்து இலங்கைப்படை முற்ருக வெளியேறவேண்டும் என்றும் இந்தத் தீர்மானத்தில் கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்திய அமைதிப்படை வெளியேறக்கூடாதென்று கோரி நேற்று திருகோணமலையில் ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட இந்த ஊர்வலத்தின் முடிவில் வட- [illegible] மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

## அமைதிப்படையின் நகரகமாண்டன்ட் விளக்கம்

[யாழ்ப்பாணம்]

''பிரச்னைகளுக்குப்பரிகாரம் காண்பதற்காக இந்திய அமைதிப்படை முகாம்களுக்கும் இலங்கை இராணுவ முகாம்களுக்கும் செல்வதை நிறுத்திக்கொள்ளவேண்டுமென்று தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுமக்களை துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் மற்றும் பத்திரிகை அறிக்கைகள் மூலம் அண்மைக் காலத்தில் கேட்டுக்கொண்டனர். கொழும்புக்கு தொலைபேசித் தொடர்புவசதிகள் இல்லாத குறைபற்றியும் பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்தன. கச்சேரி உத்தியோகத்தர்கள் திரும்பத் திரும்ப இல்லாதிருந்த காரணத்தால் மக்களின் கஷ்டங்களை நிவர்த்திசெய்வதற்கு ஐக்கிய நாடுகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தின் முயற்சிகளும் விரக்தியுற்றன.''

அமைதிப் படையின் நகரக் கமாண்டன்ட் அலுவலகம் விடுத்துள்ள பத்திரிகை அறிக்கையில் மேற்கண்டவாறுதெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''பொதுமக்கள் தங்கள் பிரச்னைகளை அரசாங்க அங்கமான பொலிஸ் அல்லது கச்சேரி உத்தியோகஸ்தர்களிடம் தெரியப்படுத்தவேண்டும். மாகாணசபையின் கருத்திற்கொண்டும் சில கச்சேரி உத்தியோகஸ்தர்கள் கடமைபுரிவதை கவனத்திற்கொண்டும் இதைச் செய்யவேண்டும் என இந்தியஅமைதிப்படை அதனை தெளிவுபடுத்தியது. அதிகாரிகள் இந்திய அமைதிப்படை தொடர்புகொண்ட போது இவ்வாறு தெளிவு படுத்தப்பட்டது.

''மக்களின் குறைபாடுகளைக் குறைக்கும் நோக்கத்துடன் பொலிஸார், நீதிபதிகள், கச்சேரி உத்தியோகஸ்தர்கள் தத்தம் அலுவலகங்களில் இருக்கவேண்டுமென்று அமைதிப்படை அவர்களிடம் கோரி வந்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

''யாழ். நகரக் கமாண்டன்ட் அலுவலகம் அமைதிப் படையுடன் தொடர்புடைய விஷயங்களுக்கு மாத்திரமே தொடர்புகொள்ளப்பட வேண்டும் என்று அமைதிப் படை அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

''கொழும்புக்கு தொடர்பு கொள்வது சம்பந்தமான பொதுமக்கள் பிரச்னையைத் தீர்ப்பது சம்பந்தமாக பத்திரிகை நிருபர் ஒருவர் நகரக் கமாண்டன்ட் அலுவலகத்துடன் தொடர்புகொண்ட போது, கொழும்புடனுன தொடர்புகள் துண்டிக்கப்பட்டதற்கான சந்தர்ப்பங்களை பொதுமக்கள் நினைவுகொள்வார்கள் என அமைப்படை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

''எனினும் அமைதிப்படையின் தொலைத் தொடர்பு நிபுணர்களின் இடைவிடாத முயற்சியின் காரணமாக கொழும்புடன் தொடர்பு கொள்வது சில நாட்களாக இயங்கிவருகிறது. எனினும் அதன் சக்தி மட்டுப்படுத்தப் பட்டிருப்பதன் காரணமாக இன்று பொதுமக்கள் எல்லோருக்குமே அதன் வசதியை வழங்கமுடியாமல் இருக்கிறது.''

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1989ம் ஆண்டு ஜூன் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளிவிடப்பட்டது.

Registered as a News Paper atthe General Post Office Sr iLanka under number B/10036/81 Eelanadu P. O. Box No: 49. Telegram, Eelanadu. Telephone; 22389. 24126.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org